

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த கையேட்டினை தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள்துறை அமைச்சர் எ.வ.வேலு.அமைச்சர்கள் ராஜ கண்ணப்பன்,மனோ தங்கராஜ் ஆகியோர் வெளியிட்டனர்.உடன் அரசு கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப்யாதவ்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப், நயினார் நாகேந்திரன்,ரூபி மனோகரன், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ், தலைமை செயற்பொறியாளர் சந்திரசேகர் ஆகியோர் உள்பட பலர் உள்ளனர்.

### இயற்கை வளங்களை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு

# கொடுக்கும் பொறுப்பு பூமியில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, மே 26-

இந்த உலகம் உயிர் வாழ் இனங்கள் அனைத்திற்கும் சொந்தம். இயற்கை வளங்களை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் பொறுப்பு இந்த பூமியில் வாழும் நம் அனைவருக்கும் உள்ளதால் பொறுப்புணர்ந்து இயற்கையை நேசிப்போம் என 'தினகரன்' நாளேடு 24.5.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

வெயில் சுட்டெரிக்கும் இந்த நேரத்தில் சமீபகாலமாக வானிலை மாறி வருவதும் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. உலகம் முழுவதும் தட்பவெப்ப நிலை மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படியே போனால் இது மனிதகுலத்திற்கு மட்டுமல்ல, பூமியில் உயிர் வாழும் அத்தனை ஜீவராசிகளுக்கும் ஆபத்தாக போய் முடியும். எனவே வானிலை, பருவ நிலை மாற்றம் குறித்து கொஞ்சமேனும் அக்கறை பட வேண்டும் என்று வானிலை ஆர்வலர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள்.




உலகம் முழுவதும் வானிலை மாற்றத்தால் கடந்த 50 ஆண்டுகளில் 20 லட்சம் பேர் பலியாகி உள்ளனர். சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நடந்த உலக வானிலை மாநாட்டில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட பல்வேறு பேரிடர்களால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதம் அளவுக்கு பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.

ஆசிய நாடுகள் அதிக அளவு வானிலை பாதிப்பை எதிர்கொண்டு உள்ளன. ஆசிய நாடுகளில் மட்டும் வானிலை பாதிப்பால் கடந்த 50 ஆண்டுகளில் 10 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில், 7 லட்சத்து 33 ஆயிரத்து 585 பேர் பருவநிலை பேரிடரால் உயிரிழந்து உள்ளனர். இதில் 95 சதவீதம் வறட்சி நிலையால் ஏற்பட்டவை.

உலகம் முழுவதும் கடந்த 1970 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வானிலை, பருவ நிலை மற்றும் நீர் தொடர்புடைய தீங்குகளால் 12 ஆயிரம் பேரிடர்கள் ஏற்பட்டு உள்ளன. இதனால், வளர்ந்து வரும் நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. இந்திய மதிப்பில் ரூ.356 லட்சம் கோடி பொருளாதார இழப்புகள் வானிலை பாதிப்பு காரணமாக உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் உலக அளவில் 11,778 இயற்கை பேரிடர் ஏற்பட்டுள்ளது. இதில் பலியான 20 லட்சம் பேரில் 90 சதவீதம் பேர் வளரும் நாடுகளை சேர்ந்தவர்கள். கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் மட்டும் 573 பேரிடர்கள் ஏற்பட்டு உள்ளன. அதில் 1.38 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள். ஆசிய நாடுகளில் அதிகபட்சமாக வங்க தேசத்தில் ஏற்பட்ட 281 பேரிடர்களில் 5.20 லட்சம் பேர் பலியாகி இருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு பேரிடர் சமயத்திலும் உயிர் பலி ஏற்படுவதை தடுக்க வானிலை மாற்றம், பருவ நிலை மாற்றம் குறித்து ஒவ்வொரு நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐ.நா. உள்பட பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

அதற்கான நிதியும் ஒதுக்கப்படுகிறது. ஆனால் பொறுப்பெடுத்துக்கொள்ளத்தான் யாரும் தயாராக இல்லை. நீர், நிலம், காற்று உள்ளிட்ட இயற்கை வளங்களை மாசுபடுத்தி, அழித்து வரும் ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லை என்றால் இயற்கை ஏதாவது ஒரு வழியில் தனது கோபத்தை காட்டிக் கொண்டு தான் இருக்கும்.

இந்த உலகம் உயிர் வாழ் இனங்கள் அனைத்திற்கும் சொந்தம். அந்த உணர்வு வேண்டும். அப்போதுதான் பயன்படுத்திய இயற்கை வளங்களை மீண்டும் அதே அளவுக்கு சேகரிக்க வேண்டிய உணர்வு வரும். குறிப்பாக நாம் பயன்படுத்தும், நமக்கு தேவைப்படும் இந்த இயற்கை வளங்களை அத்தனை பத்திரமாக அடுத்த தலைமுறைக்கு கடத்திச் சென்று கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த பூமியில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. எனவே உரிய பொறுப்பு உணர்ந்து இயற்கையை நேசிப்போம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழறிஞர்

# கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை,மே 26 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும் மாநில துணைத் தலைவர் வனத் துறை அமைச்சர் மதிவேந்தன் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் விழுப்புரம் புஷ்பராஜ், வி.பி.இராஜன், திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி மாநில துணைச் செயலாளர்கள் கோத்தகிரி மு.பொன்தோஸ், திருச்செங்கோடு மு.பரமானந்தம், மயிலை சி.தசரதன், அரூர் சா.இராசேந்திரன், மானாமதுரை மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

ஆண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வை தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர்; ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளர்; அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர். இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர்; இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர்; திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 2023 சூன் 3ஆம் நாள் தொடங்குகிறது. நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காகவும் அவர்தம் சந்ததியினருக்காகவும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி அல்லும் பகலும் அயராது பாடுபட்ட தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, 2023 ஜுன் 3 முதல் 2024 ஜுன் 3 வரையிலான ஓராண்டு முழுவதும் எழுச்சியோடு தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரை எங்கெங்கும் நடத்திட தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தீர்மானிக்கிறது.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம்

எண்பதாண்டு கால பொதுவாழ்க்கைக்கு சொந்தக்காரரும் ஒப்பாருமிக்காருமில்லாத தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும் தி.மு.க. மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்திடுவதெனவும்,

அதைப்போலவே. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்

தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அவர் மாநாட்டு உரை நிகழ்த்தும், தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநாட்டினை நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 21.5.2023 அன்று நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டத்தில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் ஆதிதிராவிடர் இன மக்கள் வாழும் அனைத்து பகுதிகளிலும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க நாளான ஜுன் 3ஆம் தேதியன்று ஒரே நேரத்தில் அவரது திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதுடன், அனைவருக்கும் இனிப்பு வழங்கிட வேண்டுமென ஆதிதிராவிடர் இன மக்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நடைபெற்ற முடிந்த ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்ட கழக கூட்டணி வேட்பாளரான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் வெற்றி கடுமையாக பணியாற்றிய நமது ஆதிதிராவிடர் நலக்குழுவைச் சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கு, இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பட்டியல் ஏற்கனவே வெளியிடப்பட்ட மாவட்டங்களைத் தவிர, மீதமுள்ள மாவட்டங்களுக்கான பட்டியலை விரைந்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகர் தெற்கு பகுதி 26வது வார்டு காட்டு பரமக்குடியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட உள்ள புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் துவக்கி வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் மன்ற உறுப்பினர் ராதா பூசத்து மற்றும் சோலை செல்லப்பாண்டி, நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம் மற்றும் கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.




### வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு!



வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் அவசர செயற்குழுக் கூட்டம். மாவட்ட அவைத் தலைவர், தலைமை தணிக்கைகுழு உறுப்பினர் தி.அ.முகமதுசகி தலைமையில் 30.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10 மணியளவில் வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடுவது, உறுப்பினர் சேர்க்கை, கழக ஆக்கப் பணிகள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார்
### மே 26 (1989)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

"தென்னாட்டு போர்க்களங்கள்" உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பிரெஞ்சு உள்ளிட்ட பத்து மொழிகளை நன்கு கற்றறிந்தவர்.

"தோய்ந்த புலமையாலும், ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் அறிஞர்கள் பலர் தொடமுடியாத எல்லைகளையெல்லாம் ஆராய்ந்து விரிவாக எழுதியவர் நமது பன்மொழிப் புலவர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கலில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**